( Chapter XXIII Code of Criminal Procedure.)

-------

IN THE COURT OF **DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, THIRUCHULI**

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | C.C. 57/2022 |
| Deposition of witness for | :: | Pw.6 |
| Name | :: | துரைசிங்கம் (சார்பு ஆய்வாளர்) |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05 day January of 2023

---

**முதல் விசாரணை.:-**

1. நான் தற்போது விருதுநகர் மாவட்ட காவல் கட்டுபாட்டு அறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.01.2022ம் தேதியன்று நான் வீரசோழன் காவல் நிலையத்தில் பொறுப்பு அதிகாரியாக இருக்கும்போது மாலை 5.00 மணியளவில் நிலையம் வந்த புளியாண்டார்கோட்டையைச் சேர்ந்த பழனிசாமி என்பவரின் மனைவி ஜெயபிரியா என்பவர் கொடுத்த புகாரைப் பெற்று முதற்கட்ட விசாரணைக்காக நிலைய புகார் மனு எண்.15/22ம் படி பதிவு செய்து புகாரை விசாரிக்க மறுநாள் காலை சம்பவம் இடம் சென்றேன். சாட்சியை விசாரணை செய்தததில் சம்பவம் உண்மை என தெரியவர 27.01.2022ம் தேதி மேற்கண்ட புகார் மனுவை குற்ற வழக்காக நிலைய குற்ற எண்.12/22ன் படி இதச பிரிவுகள் 452, 354(B). 506(1), 509, உ/இ தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை சட்டம் பிரிவு 4-ன் கீழ் முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்தேன். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் அன்றே 10.30 மணியளவில் சம்பவ இடம் சம்பவ சாட்சிகளான கருப்பசாமி, மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ 5. மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் எதிரி தேடி சுற்றுமுற்றும் உள்ள கிராமங்களில் விசாரித்ததில் முத்தனேரி விலக்கு ரோடு அருகே சுமார் 13.30 மணியளவில் எதிரி திருப்பதியிடம் காணரம் கூறி கைது செய்து 14.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்தேன். வழக்கின் எதிரியை அன்றே காவல் அடைப்புக்கு வழி காவல் மூலம் அனுப்பிவைத்தேன். பின்னர் சாட்சிகள் ஜெயபிரியா, இருளாயி, காளிமுத்து ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் இறுதியறிக்கையை 29.01.2022ம் தேதியன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

எ.த.கு.வி.

2. எதிரி ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.